# திராவிடப் போராளிகள்

21 ■ வழக்கறிஞர் அருள்மொழி

## சிறைக்கஞ்சாத சிங்கப் பெண்

## பட்டம்மாள்

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**



*14.11.1938 அன்று சென்னை குற்றவியல் நீதிமன்றத்தில் ஐந்து பெண்கள் கைது செய்யப்பட்டு, நீதிபதியின் முன் நிறுத்தப் பட்டார்கள். அவர்கள் செய்த குற்றம் என்ன என்று நீதிபதி கேட்க, அரசை எதிர்த்து, இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தினார்கள் என்று தெரி விக்கப்பட்டது. அவர்கள் அணிந்திருந்த சேலைகளில் தமிழ்க்கொடிச் சின்னம் பொறிக் கப்பட்டிருந்தது. ஐந்து பெண்களையும் சிறைக்கு அனுப்ப உத்தரவு வழங்கினார் நீதிபதி.*

ஒவ்வொருவராகப் பெயரைப் பதிவு செய்யும்போதுதான் தெரிந்தது. சீத்தம்மாள் என்ற பெண் (டாக்டர் தர்மாம்பாளின் மருமகள்) இரண்டு குழந்தைகளுடன் சிறைக்குச் செல்லத் தயாராக வந்துள்ளார். முதல் குழந்தை, பெண். வயது நான்கு. இரண்டாவது குழந்தை, ஆண். வயது ஒன்று.

“சிறைச்சாலை விதிகளின்படி ஒரு குழந்தையை மட்டும்தான் சிறையில் வைத்துக்கொள்ள முடியும். அதனால், இன்னொரு குழந்தையை உறவினர்களிடம் கொடுத்து விடுங்கள்” என்று நீதிபதி கூறியதைக் கேட்டு, குழந்தையைப் பிரிய மனமின்றி சீத்தம்மாள் திகைத்தபோது, அருகில் இருந்த இன்னொரு இளம்போராளி சட்டென்று சீத்தம்மாளின் இரண்டாவது குழந்தையைத் தன் கையில் ஏந்திக்கொண்டு “இது என் குழந்தை. என்னுடன் சிறைக்கு எடுத்துச் செல்கிறேன்” என்று கூறியவுடன் நீதிபதி வியப்படைந்து, கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்.

இரண்டு குழந்தைகளும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்காக தாயுடன் சிறையில் இருந்த னர். அந்தத் துணிச்சலும் அறிவுக் கூர்மையும் கொண்ட போராளியின் பெயர்தான் **பட்டம்மாள் பாலசுந்தரம்.** சிறை சென்ற மற்ற மூவர் **டாக்டர். தர்மாம்பாள், மூவலூர் இராமாமிர்தம், மலர்முகத்தம்மையார்** ஆகியோர்.

### இருமுறை சிறை சென்ற வீராங்கனை

பட்டம்மாள் அத்துடன் தன் போராட்டத்தை முடிக்கவில்லை. இராஜாஜி பதவி விலகும் வரை தொடர்ந்து நடந்த இந்தி எதிர்ப்புப் போரில், தன் முதல் சிறைத் தண்டனை முடிந்து, விடுதலை பெற்ற பின் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டு, 20.2.1939 அன்று தன் ஒரு வயது மகனுடன் இரண்டாம் முறை சிறை சென்ற வீராங்கனை என்ற சிறப்பைப் பெற்றபோது அவருக்கு வயது 27.

பட்டம்மாளின் போர்க்குணத்தை ஊக்கப்படுத்தியவர் அவரது கணவர் பாவலர் பாலசுந்தரம். ‘திருவாரூர் பாவலர் பாலசுந்தரம்’ என்ற பெயர் இடம்பெறாமல், திராவிட இயக்க வரலாற்றினை யாரும் எழுதிவிட முடியாது. பாவலர் பாலசுந்தரம் அவர்கள்தான் ‘பராசக்தி’ திரைப்படத்தின் மூலக்கதையை நாடகமாக எழுதியவர். பின்னர் அந்த நாடகம் திரைப்படமானபோது, திரைக்கதை வசனத்தை முத்தமிழறிஞர் கலைஞர் எழுதினார்.

### குடும்பமே மொழிப்போர்க் களத்தில்

முகவை மாவட்டம் என்றழைக்கப்பட்ட ஒருங்கிணைந்த இராமநாதபுரத்தின் முதுகுளத்தூரில், 1912–ஆம் ஆண்டு பிறந்தவர் பட்டம்மாள். அவரது தாயார் பெயர் அம்மணியம்மாள். தந்தையார் பெயர் சொக்கலிங்கம். பட்டம்மாள் பள்ளியில் படித்தது ஆறாம் வகுப்புதான். ஆனால் பகுத்தறிவுப் பாசறையில் அவர் பெற்ற பயிற்சி பட்டப்படிப்பினும் உயர்ந்தது.

பட்டம்மாள் பாலசுந்தரம் இணையருக்கு தமிழரசன் என்ற மகனும் அறிவுக்கொடி என்ற மகளும் பிறந்தனர்.

கொள்கையே வாழ்க்கையாகவும் வாழ்க்கையே கொள்கையாகவும் கொண்ட பாவலர் பாலசுந்தரம்–பட்டம்மாள் இருவரும் செய்த தியாகங்கள் சொல்லில் அடங்காதவை.

உலகில் எந்த நாட்டின் போராட்ட இயக்கமும் நடத்தாத, நடத்தத் துணியாத ஒரு போராட்டத்தை பெரியார் அவர்கள் 1957 நவம்பர் 26 ஆம் நாள் நடத்திக் காட்டினார். அதுதான் அரசியல் சட்டத்தின் நகலை எரிக்கும் போராட்டம்.

பத்தாயிரம் பேர் எந்த விளைவுக்கும் தயார் என்று துணிந்து நின்ற அந்தப் போராட்டத்தில் இளம்பெண்ணான தன் மகள் அறிவுக்கொடியுடன் தானும் அரசியல் சட்டநகலை எரித்தார் பட்டம்மாள். தாயும் மகளும் கைது செய்யப்பட்டனர். 12.12.1957 அன்று சைதாப்பேட்டை நீதிமன்றம் இருவருக்கும் மூன்று மாத சிறைத்தண்டனை விதித்தது. மூன்று மாதங்களும் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

பட்டம்மாள் அம்மையாரின் உள்ளத்தில் என்றும் அணையாத கொள்கைத் தீ அவரை சிறைப் பறவையாகவே மாற்றியது.



ஓவியம் : ரவிபேலட்

> பெரியார் அறிவித்த போராட்டங்களில் பட்டம்மாள் கலந்துகொள்ளாத போராட்டங்களே இல்லை. எந்தப் போராட்டமும் வீரியத்தில் குறைந்ததில்லை.
>
> * முரளீஸ் கஃபே பிராமணாள் பெயர் அழிப்புப் போராட்டம்
>
> * இரயில் நிலையப் பெயர்ப்பலகைகளில் இந்தி எழுத்துகளை தார்பூசி அழிக்கும் போராட்டம்,
>
> அத்தனைப் போராட்டங்களிலும் பட்டம்மாள் அம்மையார் இருந்தார்.

### திராவிடர் கழகமே குடும்பம்

பெரியார் அவர்கள் 1973–ஆம் ஆண்டு மறைந்த பின், அன்னை மணியம்மையாரின் தலைமையில் அவசரகால அடக்குமுறையை எதிர்த்து நின்ற போராட்ட காலத்திலும் அசைக்க முடியாத உறுதியுடன் நின்றார் அம்மையார். ஒன்றிய அரசு அலுவலகங்களின் முன் நடைபெற்ற மறியல் போராட்டங்கள், ஒன்றிய அமைச்சர் களுக்கு கறுப்புக்கொடி காட்டுவது ஆகிய வற்றிலும் அம்மையார் பங்கேற்றார்.

அன்னை மணியம்மையார் அவர்களின் மறைவுக்குப் பின் திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளராகப் பொறுப்பேற்ற ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தலைமையில் தொடர்ந்து அதே வேகத்துடன் செயல்பட்டார்கள்.

1987–ஆம் ஆண்டு பாவலர் பாலசுந்தரம் அவர்கள் காலமானார். அதன் பிறகு பட்டம்மாள், அவர் மகள் அறிவுக்கொடி இருவருக்கும் திராவிடர் கழகமே குடும்பமானது.

### பட்டம்மாள் நினைவாக பூங்கா

திராவிடர் கழகம் நடத்திய மண்டல் பரிந்துரைக்கான போராட்டங்களிலும், காவிரி நீருக்கான போராட்டங்களிலும் அறிவுக்கொடியும் பட்டம்மாள் அம்மையாரும் முதல் வரிசையில் நின்றார்கள்.

“போராட்டம் என்று அறி வித்தால் யார் வந்தாலும் வராவிட்டாலும் ஒரே ஒருவர் கட்டாயம் என்னுடன் வருவார். அவர்தான் பட்டம்மாள் பாவலர்” என்று திராவிடர் கழகத் தலைவர், அம்மையாரின் தொண்டைப் பாராட்டினார்.

தஞ்சை வல்லம் நகரில் உள்ள தந்தை பெரியார் மணியம்மை பல்கலைக்கழக வளாகத்தின் உள்ளே அமைந்த பூங்காவுக்கு ‘பட்டம்மாள் பாலசுந்தரம் பூங்கா’ என்று பெயர் சூட்டினார்.

இன்னும் பல வரலாற்றுச் செய்திகளைப் பொதிந்து வைத்திருந்த பட்டம்மாள் அம்மையாரின் கொள்கை வாழ்வு 1993–ஆம் ஆண்டு ஜனவரி 4–ஆம் நாள் நிறைவுபெற்றது. அதற்கு பத்து நாட்களுக்கு முன்னால் அம்மையாரின் அன்பு மகள் அறிவுக்கொடி மறைந்துவிட்டார். உள்ளத்தை நெகிழச் செய்யும் அந்த திராவிடப் போராளிகளின் வாழ்வும் தொண்டும் நமது பாதையின் திசைக்காட்டிகளாக நிற்கின்றன.

**‘களப்பணி ஆற்றவும், போராடவும், மீண்டும் மீண்டும் சிறை செல்லவும் துணிந்த தொண்டர்கள் தான் ஒரு இயக்கத்தின் முதுகெலும்பு’ என்பதே பட்டம்மாள் பாலசுந்தரம் என்ற போராளியின் வாழ்க்கை சொல்லும் பாடம்.**

(வருவார்கள்...)

---

## ஈரோட்டுக்குப் புதிய பெருமை!



தந்தை பெரியார் பிறந்த ஈரோட்டில் ‘மக்கள் சிந்தனைப் பேரவை’ எனும் அமைப்பு கடந்த 18 ஆண்டுகளாக புத்தகத் திருவிழாவை வெற்றிகரமாக நடத்தி வருகிறது. ‘பபாசி’ அமைப்பு அரசு உதவியுடன் நடத்தும் புத்தகத் திருவிழாக்களுக்குச் சற்றும் குறையாத அளவிலும் தரத்திலும் ஈரோடு புத்தகக் கண்காட்சி நடந்து வருகிறது.

அந்தத் திருவிழாவை நடத்தும் அமைப்பின் தலைவராகச் செயல்படுபவர் ஸ்டாலின் குணசேகரன். இடதுசாரி செயற்பாட்டாளர், வழக்கறிஞர், எழுத்தாளர், மேடைப் பேச்சாளர் என்று இவருக்குப் பல அடையாளங்கள் உண்டு.

இவர், 75 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட ’நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்’ நிறுவனத்தின் தலைவராக கடந்த சில நாட்களுக்கு முன்பு தேர்வு செய்யப்பட்டுள்ளார். வாசிப்பு இயக்கத்தை மிகத் தீவிரமாக முன்னெடுக்கும் அவர் ’நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்’ தலைவராக வந்திருப்பதால்; தமிழ்நாட்டில் வாசிப்புப் பழக்கம் இன்னும் வளமாகும், வளரும் என்று நம்பலாம். இதனால், ஈரோட்டின் பெருமைப் பட்டியலில் எண்ணிக்கை ஒன்று கூடியிருக்கிறது!

## ஃப்ளாஷ்பேக்



### கலைஞருக்கு நாணயம்!



மனோகரன்

ஒருங்கிணைந்த சென்னை மாவட்டம், ஆர். கே.நகர் பகுதி சார்பில், 1984–ஆம் ஆண்டு மே 22 ஆம் தேதி தலைவர் கலைஞர் அவர்களது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் தலைவரை சிறப்பிக்கும் வகையில், அவரை தராசில் அமர வைத்து எடைக்கு எடை நாணயம் வழங்கப்பட்டது. 21 வயதே நிறைந்த நான், தலைவருக்குக் கைத்தறி ஆடை அணிவித்து மகிழ்ந்தேன். நான் மிகப் பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருக்கும் புகைப்படம் இது.

**–ந.மனோகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர், வட சென்னை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை–600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ஜனநாயக விரோதம்!

**1976–ஆம் ஆண்டு கழக ஆட்சி கலைக்கப்பட்டது குறித்து எம்.ஜி.ராமச்சந்திரனிடம் கருத்து கேட்டபோது, ‘ஆட்சிக் கலைப்பு தைரியமான நடவடிக்கை. ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நட வடிக்கை’ என்றார். சட்டசபையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கொண்டிருந்தது கழகம். 234 பேர் கொண்ட அவையில், 167 பேர்களைக் கொண்ட கழக அமைச்சரவையைக் கலைத்தது ‘ஜனநாயகச் செயல்’ என எந்தக் கூச்சமுமின்றி குறிப்பிட்டார் எம்.ஜி.ஆர். ஆட்சியைக் கலைத்ததற்கு நாடாளுமன்றத்தில், கழகத்துடன் இணைந்து சி.பி.எம்., ஸ்தாபன காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்தன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 141




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131